அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண் : 24 / 2018
தேதி : 12.02.2018

## சட்டப்பேரவையில் மறைந்த முன்னாள் முதல்வர் அவர்களின் திருவுருவப்படம் திறந்தது குறித்து

## அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ரா.சரத்குமார் அறிக்கை.

மறைந்த முன்னாள் முதல்வர் அவர்களுக்கு, வழங்கிய தீர்ப்பை மறு ஆய்வு செய்ய முடியாத சூழலில், அவர் வகித்த பதவியின் அடிப்படையில் சட்டப்பேரவையில் மறைந்த முன்னாள் முதல்வர் அவர்களின் திருவுருவப்படத்தை திறந்தது தவறில்லை என்றாலும், இம்முடிவு சட்ட நிபுணர்களை கலந்தாலோசித்து எடுக்கப்பட வேண்டிய முடிவு என்றே நான் கருதுகிறேன்.

மறைந்த முதல்வர் அவர்கள், அஇஅதிமுக முன்னோடிகளின் நெஞ்சத்திலும், இயக்கத்தின் லட்சோபலட்ச சகோதர, சகோதரிகளின் நெஞ்சத்திலும் நீங்கா இடம் பெற்றிருப்பவர் என்பதில் யாருக்கும் ஐயமில்லை. அதே சமயம் ஜனநாயக நாட்டில் நாம் அனைவரும் ஏழை – பணக்காரன், அதிகாரத்தில் உள்ளவர்கள் – சாமானியர்கள் போன்ற ஏற்றத்தாழ்வு என்னும் பாகுபாடுகளை கடந்து, சட்டத்திற்கு உட்பட்டவர்கள் என்ற முறையில் நாம் எடுக்கின்ற ஒவ்வொரு முடிவும் நாளைய தலைமுறையினரை பாதிக்காமல் இருக்க வேண்டுமானால் முன்னாள் முதல்வர் அவர்களின் திருவுருவப்படத்தை சட்டமன்ற வளாகத்திலோ, அரசு அலுவலகங்களிலோ தவிர்ப்பது வருங்கால ஜனநாயகத் தலைமுறையினருக்கு ஒரு நல்ல முன்னுதாரணமாக இருக்கும் என்றே நான் கருதுகிறேன்.

நன்றி வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

**ரா.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்